**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 28/2013**

PW1 – செல்வமணி (எ) மகாராஜன் த/பெ கண்ணப்பன்
நாள்–21.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

மாரிமுத்து படையாட்சியின் மகன்கள் தான் மகாலிங்க படையாட்சி மற்றும் சிவபிரகார படையாட்சி என்றால் சரிதான். ராஜம்மாளின் கணவர் பெயர் ரத்தின படையாட்சி என்றால் எனக்கு தெரியாது. புல எண் 54/2–ல் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டதாக பி.சா.ஆ.4 –க்கு முந்தைய ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் என்னிடம் உள்ள ஆவணங்களை தான் நான் தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.4–ல் ரத்தினபடையாட்சியின் நிலத்திற்கு வடக்கு என நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.4–ல் கண்ட சொத்தை தான் பி.சா.ஆ.1 படி ஆளுக்கு 1 5/8 செண்ட் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

பி.சா.ஆ–1–ல் எனது தாத்தா சிவபிரகாசபடையாட்சிக்கு ஒதுக்கப்பட்ட B அட்டவணை சொத்தில் ராஜம்மாள் புஞ்சைக்கு வடக்கு என்றுதான் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 –ன் படி தென்பகுதியை சிவபிரகாசமும் வடபகுதியை மகாலிங்கமும் பிரத்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. எனது தாத்தா சிவபிரகாசபடையாட்சிக்கு பூர்வீக சொத்தில் 1 5/8 செண்ட் தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் சொத்துக்கள் வாதிகளின் சொத்திற்கு வடக்கில் உள்ளது என்றால் சரிதான். மகாலிங்கத்திற்கு பாகம் ஒதுக்கப்பட்ட சொத்திற்கு வடக்கில் தான் அம்மாகண்ணுக்கு பாத்தியப்பட்ட 1 ¾ செண்ட் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

மகாலிங்கம்–அம்மாகண்ணுவின் மகன்தான் தட்சிணாமூர்த்தி என்றால் சரிதான். கிருஷ்ணவேணி மகாலிங்கத்தின் மருமகள் என்றால் சரிதான். மகாலிங்கத்திற்கு பாகப்பிரிவினை கிடைக்கப்பெற்ற சொத்தும் அவரது மனைவி அம்மாகண்ணு பெயரில் உள்ள சொத்தும் ஆக மொத்தம் 3 ½ செண்ட் தான் பாத்தியம் என்றால் சரியல்ல. மகாலிங்கம் வாரிசுகளிடம் நாங்கள் 6 செண்ட் கிரயம் பெற்றது செல்லாது என்றால் சரியல்ல . மகாலிங்கம் குடும்பத்தாருக்கு 6 செண்ட் நிலம் பாத்தியப்பட்டிருந்ததாக நாங்கள் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புல எண் 54/2 ஆனது நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தில் வாதிகளுக்கு புல எண் 54/2 E–ல் 7 ½ செண்ட் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

புல எண் 54/ 2E க்கு வடக்கில் மேல் பாகம் புல எண் 54/2D1 விஸ்தீரணம் 2 ½ எனவும் அதற்கு கீழ் பாகம் புல எண் 54/2D2 விஸ்தீரணம் 1 ½ எனவும் சிவபிரகாசம் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண் 54/2D1 மற்றும் புல எண் 54/2D2–க்கு வடக்கில் உள்ள 6 செண்ட் ஆனது கீழ் பாகம் புல எண் 54/2C1–4 செண்ட் எனவும், மேல்பாகம் புல எண் 54/2C2–2 செண்ட் எனவும் பட்டா வழங்கப்பட்டுள்ளதா என்றால் சரிதான். மேற்படி 6 செண்டுக்கான பட்டா தவறுதலாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புல எண் 54/2C1 மகாலிங்கம் குடும்பத்தாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மகாலிங்கம் குடும்பத்தாருக்கு 3 ½ தான் பாத்தியம் எனவும் 6 செண்ட் பட்டா வழங்கப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை தான் எனது தகப்பனார் பெயரில் புல எண் 54/2D1 என பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மேற்படி புல எண் 54/2D1 –ஐ தான் வாதிகள் சுவாதீன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகள் ஆவணங்களை பரிசீலிக்காமல் தவறாக கொடுக்கப்பட்ட பட்டாவின் படி நாங்கள் எதிர் வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 மற்றும் பி.சா.ஆ.1

வெவ்வேறு சொத்துக்கானது என்பது தவறு என்றால் சரியல்ல. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட புல எண் 54/2D1 வாதிகள் கோரியப்படி சுவாதீனம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. புல எண் 54/2D1–ல் எனது தாத்தாவிற்கு வழங்கப்பட்ட பட்டா தவறு என்றால் சரியல்ல. எங்களுக்கு உண்டான மூலப்பத்திரங்களை தாக்கல் செய்தால் எங்களுக்கு விரோதமாக அமையும் என்று தான் மூலப்பத்திரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.